1994 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. பி. ராஜு.

திரு. கே. பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூக்களிலே முல்லை, மல்லிகை, தாழம்பூ என்று சொல்கிறார்கள். இன்னும் பல்வேறு வகையான பூக்கள் இருக்கின்றன. பூக்களிலே சிறந்த பூ எது? அதுவும் புதிதாக திருமணம் ஆன இளம் மணமக்களுக்கு எந்தப் பூ பிடிக்கும் என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் அனுபவ ரீதியில் போய்த் தெரிந்துகொள்ளுங்கள். (சிரிப்பு):

வினா எண். 511, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்,

511—

சின்னசேலத்தில் காளான் வளர்ப்புப் பண்ணை அமைத்தல்.

*24247—திரு. ஆர். பி. பரமசிவம்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், சின்னசேலத்தில் வேளாண்மைத் துறை மூலம் காளான் வளர்ப்புப் பண்ணை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எனவே, துணைக் கேள்விக்குப் பதில் இல்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை மாநிலத்தில் எந்த ஒரு இடத்திலேயும் காளான் வளர்க்கின்ற பண்ணை இப்போது இல்லை. வளர்ந்துவரும் தொழிலாக இருக்கின்ற இந்தக் காளான் வளர்ப்பு, இதனைப் பயன்படுத்துவதற்கு உதவியாக அரசு மூலம் மாதிரிப் பண்ணை ஏற்படுத்த அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்யுமா? அத்துடன் புதிய மாவட்டமான எங்களுடைய விழுப்புரம் மாவட்டத்தில் இதை ஏற்படுத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு காளான் பண்ணையை அமைக்காது என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு தனியார்கள் காளான்களை உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நல்ல வருவாயைப் பெற்று வருகிறார்கள். எனவே, தனியார்கள் இது போன்ற பண்ணைகளை வைத்திருக்கிறார்கள். அப்படி பண்ணை வைத்திருக்கிறவர்கள் யாராவது நிதியுதவி வேண்டுமென்று வந்தால் அரசு அவர்களுக்கு நிதியுதவி பெற்றுத்தரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில் சில விவசாயிகளைத் தேர்வு செய்து, அந்த விவசாயிகளை வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி, அங்கே பயிற்சி அளிக்க வைத்து, அவர்கள் மூலம் இந்தத் தொழிலை குடிசைத் தொழிலாகச் செய்வதற்கு ஊக்குவிக்க அரசிடம் திட்டங்கள் ஏதாவது உள்ளதா? அத்துடன் தற்போது விவசாயிகளுக்கு இந்த விதைகள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அந்தக் காளான் விதைகள் போதுமான அளவில் எங்கும் கிடைக்கவில்லை. ஆகவே இந்த விதைகள் விவசாயிகளுக்கு மிகவும் சுலபமாகக் கிடைப்பதற்காக சின்ன சேலத்தில் வேளாண்துறை மூலமாக விதை விற்பனை நிலையத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் பயிற்சிக்குப் போய் அந்தப் பயிற்சியைப் பெற்று வருகின்றபோதே அவர்கள் அந்தத் தொழிலைச் செய்வதற்கு வேண்டிய மூலப்பொருள், விதைகள், விதை எடுக்கக் கூடிய அந்தக் கருவிகள், அதனைப் போன்று சுத்தம் பண்ணக்கூடிய கருவிகள், கிருமிகளைக் கொல்லக் கூடிய மருந்துகள் ஆகிய இவை அனைத்தும் அவர்களுக்கு இலவசமாக மினிக்கிட்டாகத் தரப்படுகின்றது. அதனைப் பெற்றுக் கொண்டு வரக்கூடிய அந்தப் பயிற்சியளார்கள் அவர்கள் இல்லங்களிலே அந்தக் காளான் வளர்க்கின்ற பணியிலே அவர்கள் ஈடுபடலாம். அவர்கள் ஈடுபட்டு வெற்றி பெற்று வந்தற்குப் பின்னால், பெரிய அளவிலே அவர்கள் தொழில் தொடங்க முன்வந்தால், அவர்களுக்கு அரசு ஆலோசனையும், நிதியுதவியும் பெற்றுத்தரும். ஆனால் அதே நேரத்திலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் தரமான விதைகள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இன்றைக்கு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலும், தனியாரிடத்திலும் நல்ல விதைகள் குறைந்த விலையில் கிடைக்கின்றன. அவைகளை அவர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 மே 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 512, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

512—

அனைத்து நகரங்களிலும் தானியங்கி பால் வழங்கும் நிலையம் அமைத்தல்.

*21887— திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் உள்ளது போல் தமிழகத்தில் உள்ள அனைத்து நகரங்களிலும் தானியங்கி பால் வழங்கும் நிலையம் மூலம் பால் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால் வளத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் கருத்துரு ஏதுமில்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் போலவே மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி, சேலம், வேலூர் போன்ற நகரங்களிலேயும் மக்கள் நெருக்கடி அதிகமாக உள்ளதால், பால் வழங்க சிரமம் இல்லாமல் இருக்க சென்னையில் உள்ளது போல தானியங்கி பால் வழங்கு நிலையம் அமைக்கப்படுமா? ஒரு தானியங்கி பால் வழங்கக் கூடிய நிலையம் அமைக்க எவ்வளவு செலவாகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் உள்ளது போல பெருநகரங்களான மதுரை, கோவை, திருச்சி, சேலம், ஈரோடு மற்றும் தர்மபுரி ஆகிய இடங்களில் தானியங்கி பால் வழங்கு நிலையம் அமைக்க தேசிய பால் வாரியத்திற்குப் பரிந்துரை செய்யப்பட்டது. இக்கருத்துருவிற்கு தேசிய பால்வள வாரியம் ஒப்புதல் அளிக்கவில்லை. தானியங்கி பால் வழங்கு நிலையம் அமைக்க தோராயமாக ரூ. 3 இலட்சம் செலவாகும்.

திரு. ஏ.கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானியங்கி பால் வழங்கு நிலையத்திற்குக் காலையில் அதிகமாக பெண்கள் செல்கிறார்கள். பல இடங்களிலே பெண்களுக்கு டோக்கன்கள் கொடுக்கின்ற நேரத்திலே, கிண்டலும்,